# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# மானியக் கோரிக்கை எண். 24

# சிறைச்சாலைகள்

# கொள்கை விளக்கக் குறிப்பு 2016–2017

## I. முன்னுரை

**"குற்றம் என்பது நோயுற்ற மனதின் விளைவு என்பதால் சிறைகள் மருத்துவமனை போன்ற சூழல் கொண்டு சிகிச்சை அளித்து பாதுகாக்கும் வகையில் இருத்தல் வேண்டும்."**

**– மகாத்மா காந்தி**

சிறைத்துறையின் அடிப்படை நோக்கம், குற்றவாளிகளை சிறையில் வைத்து மீண்டும் குற்றமிழைக்காமல் தடுப்பதுடன், அவர்களின் உடல் மற்றும் மனநலத்திற்கும் உகந்த சூழலை ஏற்படுத்துவதால் அவர்கள் தங்களை நன்னெறிப்படுத்திக்கொண்டு பயனுள்ள குடிமக்களாக சமுதாயத்தில் இணைத்திடச் செய்வதாகும். இதனை கருத்திற் கொண்டு, சிறைவாசிகள் பயனடையும் வகையில் முறையான

கல்வி வாய்ப்புகள் உருவாக்கப்படுவதுடன் வேலை வாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பல்வேறு வாழ்க்கைத் தொழில் வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. மேலும் சிறைவாசிகளின் மனம் மற்றும் உணர்வு சமநிலை அடையும் பொருட்டு யோகா மற்றும் தியான வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவற்றைத் தவிர, சிறைவாசிகளின் தனிப்பட்ட தேவைகளை சந்திக்கவும், அவர்கள் குடும்ப பொறுப்புகள் மற்றும் சமூகக் கடமைகள் ஆற்றவும் உதவும் வகையில் மனநல ஆலோசனை வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சிறை தண்டனை என்பது குற்றங்களிலிருந்து சமூகத்தை பாதுகாக்கும் வகையில் இருந்தால்தான் நியாயமானதாகும் என்பது உலக பொது கருத்தாகும். ஏனவே, சிறைவாசம், விடுதலைக்குப் பின்னர் சிறைவாசிகள் சுய சார்புள்ள மற்றும் சட்டத்திற்கு கீழ்படிந்து நடக்கும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள ஊக்குவித்து தயார்படுத்துகிறது.

சிறைவாசிகள் விடுதலைக்குப் பின்னர் கண்ணியமான வாழ்க்கையை வாழவும், பொருளாதார ரீதியில் தன்னிறைவு பெறும் பொருட்டும், அரசு எண்ணற்ற புதிய நலத் திட்டங்களை சிறைவாசிகளுக்காக செயல்படுத்தி வருகிறது.

## II. நிர்வாக அமைப்பு

தமிழ்நாடு சிறைத்துறை, அரசின் உள்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. கூடுதல் காவல்துறை இயக்குநர் பதவி நிலையில் உள்ள முதுநிலை இந்திய காவல் பணி அதிகாரி ஒருவரின் தலைமையின் கீழ் இத்துறை இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக, தலைமையிடத்தில் ஒரு சிறைத்துறைத் துணைத் தலைவரும் மற்றும் ஐந்து சிறைத்துறைத் துணைத் தலைவர்கள் சென்னை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகியவற்றை தலைமையிடமாகக் கொண்ட ஐந்து சரகங்களிலும் உள்ளனர். சிறைத்துறையின் நிர்வாகக் கட்டமைப்பு பிற்சேர்க்கை–I-ல் கொடுக்கப்பட்டுள்ளது. சிறைக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் மத்திய சிறைகளும், அவற்றின் அதிகார எல்லைக்குட்பட்ட மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், திறந்தவெளிச் சிறைகள், கிளைச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளிகள் ஆகியவைகளும் இயங்கி வருகின்றன. பெண்கள் தனிச் சிறை கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் புழல், திருச்சி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள பெண்கள் தனிச் சிறைகள் இயங்குகின்றன. மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள பெண்கள் தனிச் சிறைகள் கூடுதல் கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன. மாவட்டச் சிறைக் கண்காணிப்பாளராகப் பணிபுரியும் கூடுதல் கண்காணிப்பாளர்கள், அந்தந்த

மாவட்டங்களிலுள்ள தனிக் கிளைச் சிறைகள், திறந்தவெளிச் சிறைகள், கிளைச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளிகள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டு சிறைக் கண்காணிப்பாளருக்கு உதவி புரிகின்றனர். மாவட்டச் சிறைகள் இல்லாத இடங்களில், இப்பணிகளை மத்திய சிறைகளில் பணிபுரியும் கூடுதல் கண்காணிப்பாளர்கள் மேற்கொள்கின்றனர்.

சிறைத்துறையில், சிறை அலுவலர் / துணை சிறை அலுவலர் / உதவி சிறை அலுவலர்/ முதல் தலைமை சிறைக் காவலர் / முதல் நிலை சிறைக் காவலர் / இரண்டாம் நிலை சிறைக் காவலர் / தொழில்நுட்பம் / தொழில்நுட்பமல்லாத / சீர்திருத்தப் பணியாளர்கள்/ மருத்துவ மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் ஆகிய பணியிடங்கள் உள்ளன.

சிறைத்துறையில் கீழ்க்காணும் பிரிவுகள் இயங்கி வருகின்றன. சிறைத்துறைப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 30.06.2016 அன்றுள்ளவாறு 5,301 ஆகும்.

### i) நன்னடத்தைப் பிரிவு

தமிழ்நாடு சிறைத்துறையில், 1946 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் நன்னடத்தைப் பிரிவானது தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ்

இயங்கி வருகின்றது. அவருக்கு உதவியாக 12 மண்டல நன்னடத்தை அலுவலர்களும், 64 நன்னடத்தை அலுவலர்களும் உள்ளனர்.

நீதித்துறை நடுவர்களுக்கு, குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம், 1958 மற்றும் தமிழ்நாடு இளம் குற்றவாளிகள் சீர்திருத்தச் சட்டம், 1925 ஆகியவற்றை செயல்படுத்த உரிய விசாரணை அறிக்கைகள் அளித்தும், வயது வந்த குற்றவாளிகளைக் கண்காணித்தும், அவர்கள் மீண்டும் குற்றங்கள் இழைக்காவண்ணம் தடுத்திடவும், நன்னடத்தை அலுவலர்கள் உதவுகின்றனர்.

நன்னடத்தைப் பிரிவைச் சார்ந்த அலுவலர்கள், சிறைவாசிகளை நேர்காணல் செய்து, சிறைவாசிகளது குழந்தைகளின் கல்வி, குடும்ப உறுப்பினர்களின் வாழ்வாதாரத்திற்கான வருவாயை ஈட்டிட தேவையான கடன் வசதி, தண்டனை சிறைவாசிகளுக்கு விடுதலைக்குப் பின்னர் வேலை வாய்ப்பு பெறுதல், போன்ற குறிப்பான தேவைகளை ஆராய்ந்து, அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உதவியாகப் பணியாற்றுகின்றனர்.

நன்னடத்தை அலுவலர்கள் சிறைவாசிகளுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து அவர்கள்

மீண்டும் தங்கள் குடும்பத்துடனும், சமுதாயத்துடனும் இணைந்து வாழ வழிவகை செய்கின்றனர்.

### ii) நுண்ணறிவு மற்றும் விழிப்புப்பணி பிரிவு

காவல்துறையிலிருந்து மாற்றுப் பணியின் மூலம் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களையும், சிறைத்துறையைச் சேர்ந்த பணியாளர்களையும் உள்ளடக்கிய விழிப்பு மற்றும் நுண்ணறிவுப் பிரிவு ஒன்று சிறைத்துறையில் உள்ளது. இப்பிரிவு, சிறைவாசிகள் மற்றும் சிறைத்துறைப் பணியாளர்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பதுடன் சிறை நிர்வாகத்தினை திறம்பட செயல்படுத்த முக்கிய மற்றும் கூர்வுணர்வுடைய தகவல்களை சேகரிப்பதுடன், நுண்ணறிவு தகவல்களை இதர புலனாய்வு அமைப்புகளுடன் பரிமாற்றம் செய்து கொள்கிறது.

### iii) தொழில்நுட்பப் பிரிவு

சிறைத்துறைக்கு வழங்கப்பட்டுள்ள நவீன தொழில்நுட்பக் கருவிகளை சிறந்த முறையில் பராமரிப்பதற்காக ஓர் ஆய்வாளர் (தொழில்நுட்பம்) மற்றும் 10 சார்பு ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) ஆகியோரை உள்ளடக்கிய தொழில்நுட்பப் பிரிவு ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவு தலைமையிடம் மற்றும் அனைத்து மத்திய சிறைகளிலும் தனது பணிகளை மேற்கொள்கிறது.

**iv) சட்ட ஆலோசனைப் பிரிவு**

சட்டம் தொடர்பான நேர்வுகளில் துறைத் தலைவருக்கு உதவிட, தலைமை அலுவலகத்தில் ஒரு சட்ட ஆலோசகரைக் கொண்ட சட்ட ஆலோசனைப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**v) மோட்டார் வாகனப் பிரிவு**

சிறைத்துறையில் உள்ள வாகனங்களைப் பராமரிப்பதற்காகவும், வாகன ஓட்டுநர்களின் பணிகளை மேற்பார்வையிடுவதற்காகவும், தலைமையிடத்தில் காப்பு காவல் ஆய்வாளர் (வகை–2) பணியிடம் ஒன்று அரசாணை (நிலை) எண்.477, உள் (சிறை–2) துறை, நாள் 10.07.2014–ல் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

## III. பணியாளர் தேர்வு மற்றும் பயிற்சி

**பணியாளர் தேர்வு**

சிறைத்துறையின் இரண்டாம் நிலைக் காவலர்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையக் குழுமம் மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். உதவி சிறை அலுவலர்கள் மற்றும் சிறை அலுவலர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர்.

பயிற்சி

**i) காவலர் பயிற்சி மையம், வேலூர்**

வேலூரில், 130 சிறைக் காவலர்களுக்கு அடிப்படை பயிற்சி வழங்கும் வசதி கொண்ட காவலர் பயிற்சி மையம் ஒன்று போதிய பணியாளர்களுடன் வேலூர் மத்திய சிறை கண்காணிப்பாளரது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

தேர்வு செய்யப்படும் காவலர்களுக்கு உடற்பயிற்சி, ஒழுங்குமுறை, மேலாண்மை மற்றும் சீர்திருத்த முறைகள் ஆகியவற்றில் அடிப்படைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சிறைவாசிகளுக்கான மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு பயிற்சியும், நவீன படைக்கலன்கள் மற்றும் சாதனங்களைக் கையாள்வதற்கான பயிற்சிகளும் அளிக்கப்படுகிறது.

சிறைத்துறைக்கு புதிதாகத் தேர்வு செய்யப்படும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள், அவர்கள் பணியாற்றவிருக்கும் இடம், சூழ்நிலை மற்றும் பணியின் தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்வதற்காக, அவர்கள் மத்திய சிறைகளில் ஒரு மாத காலம் நேரடி பயிற்சிபெற ஏதுவாக, அவர்களது பயிற்சிக் காலத்தை 6 மாதத்திலிருந்து 7 மாதமாக நீட்டித்து அரசாணை (நிலை) எண்.312, உள் (சிறை–2) துறை, நாள் 05.05.2014–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

சென்னை, மருதம், காவல்துறை அதிரடிப்படை பயிற்சிப் பள்ளியில் வழங்கப்படும், ஆயுதமின்றி தனித்து நின்று போராடுதல், வெடிகுண்டுகளைக் கண்டறிந்து அவற்றை செயலிழக்கச் செய்தல், அதிரடிப் பயிற்சி மற்றும் இதர பயிற்சிகள் ஆகியவை சிறைக் காவலர்களுக்கும் வழங்கப்படுகின்றன. மேலும், குத்துச்சண்டை, ஜுடோ மற்றும் மல்யுத்தம் ஆகியவற்றின் நுணுக்கங்களை ஒருங்கே கொண்ட ''க்ரவ் மேகா'' என்ற, ஆயுதமின்றி தனித்து போரிடும் தற்காப்பு முறைப் பயிற்சியும் வேலூர் காவலர் பயிற்சி மையத்தில் அளிக்கப்படுகிறது. இத்தகைய பயிற்சித் திட்டங்கள் சிறைக் காவலர்களின் மன உறுதியை உயர்த்துவதுடன் அவசரகால சூழ்நிலைகளை அவர்கள் திறம்பட சமாளிக்கவும் ஏதுவாக அமைகின்றன.

2013–2014 ஆம் ஆண்டில் 360 காவலர்களுக்கு, ''க்ரவ் மேகா'' அடிப்படைப் பயிற்சியும், 2014–2015 ஆம் ஆண்டில் 100 காவலர்களுக்கு சிறப்புப் பயிற்சியும், 30 பெண் காவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சியும் ரூ.4.68 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. 2015–2016 ஆம் ஆண்டில் 33 பெண் காவலர்கள் உட்பட 396 காவலர்களுக்கு ரூ.2.34 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

சிறைக் காவலர்களுக்கு அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சி மட்டுமல்லாது, உதவி சிறை அலுவலர்கள் மற்றும் துணை

சிறை அலுவலர்களுக்கும் குறிப்பிட்ட கால இடைவெளியில் புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

### ii) சிறை மற்றும் நிர்வாகச் சீர்திருத்தப் பயிற்சியகம், வேலூர்

தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகம் மற்றும் கேரளம் ஆகிய ஐந்து தென் மாநிலங்களைச் சார்ந்த சிறைத்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க, சிறை மற்றும் நிர்வாகச் சீர்திருத்த பயிற்சியகம் என்ற ஐந்து தென்னக மாநிலங்களின் கூட்டுப் பயிற்சி மையம் வேலூரில் தொடங்கப்பட்டது. இப்பயிற்சியகத்தின் நடைமுறை செலவினத்தை ஐந்து மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. இந்நிறுவனம், சீர்திருத்தும் முறைகள் மற்றும் சிறை மேலாண்மை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கி பயிற்சியளித்து வருகிறது. இதுவரை இப்பயிற்சியகத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 1557 சிறைத்துறை அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

### iii) இதர பயிற்சித் திட்டங்கள்

புதுடில்லியில் உள்ள காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், தேசிய மனித உரிமைகள் ஆணையம், தேசிய தடய அறிவியல் நிறுவனம், தேசிய சமூகப் பாதுகாப்பு

நிறுவனம், லோக்நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் தேசிய குற்றவியல் மற்றும் தடயவியல் பயிற்சி நிறுவனம் மற்றும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் ஆகியவற்றால் மனித உரிமைகள் மற்றும் சிறை மேலாண்மை முதலியவற்றில் நடத்தப்படும் தேசிய அளவிலான பயிற்சி வகுப்புகளுக்கும் சிறைத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இந்நிறுவனங்களில் 2015–2016 ஆம் ஆண்டில் 8 அலுவலர்கள் பல்வேறு தேசிய அளவிலான பயிற்சித் திட்டங்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

## IV. சிறைகள்

மாநிலத்தில் 9 மத்திய சிறைகள், பெண்களுக்கான 5 தனிச் சிறைகள், 9 மாவட்டச் சிறைகள், ஆண்களுக்கான 88 கிளைச் சிறைகள், பெண்களுக்கான 8 கிளைச் சிறைகள், ஆண்களுக்கான 2 தனிக் கிளைச் சிறைகள், பெண்களுக்கான 2 தனிக் கிளைச் சிறைகள், 12 பார்ஸ்டல் பள்ளிகள் மற்றும் 3 திறந்தவெளிச் சிறைகள் உள்ளிட்ட 138 சிறைச்சாலைகள் உள்ளன. இம்மாநிலத்தில் உள்ள அனைத்து சிறைகளிலும் சேர்த்து அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 22,632 ஆகும். சிறைவாரியான இடவசதி பிற்சேர்க்கை–II-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

புழல் சிறை வளாகத்தில், மத்திய சிறை–I தண்டனை சிறைவாசிகளுக்கெனவும், மத்திய சிறை–II விசாரணை சிறைவாசிகளுக்கெனவும், பெண்கள் தனிச் சிறையானது பெண் சிறைவாசிகளுக்கெனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. வளர்இளம் குற்றவாளிகளுக்கென ஒரு பார்ஸ்டல் பள்ளியும் உள்ளது.

மரண தண்டனை, ஆயுள் தண்டனை மற்றும் மூன்று மாதங்களுக்கு மேல் தண்டனை பெற்றவர்கள், பெருங்குற்றங்களுக்கு தண்டனை பெற்றவர்கள், கொடுங்குற்றவாளிகள், தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் அதிக ஊறு விளைவிக்கக் கூடியவர்கள், கடன் சிறைவாசிகள், தடுப்புக்காவல் சிறைவாசிகள், விசாரணை மற்றும் காவல் சிறைவாசிகள் என முறைப்படி வகைப்படுத்தப்பட்டு, அந்த வகைப்பாட்டின்படி, மத்திய சிறைகளில் உள்ள வெவ்வேறு பகுதிகளில் தனியே பிரித்து வைக்கப்படுகின்றனர்.

மாவட்ட நீதிமன்றங்களால் மூன்று மாதகாலத்திற்கும் குறைவான தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மற்றும் விசாரணை சிறைவாசிகள் ஆகியோர் மட்டுமே அந்தந்த மாவட்டச் சிறைகளில் வைக்கப்படுகின்றார்கள். சிறுகுற்றங்கள் புரிந்த

விசாரணை சிறைவாசிகள் மட்டும் கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றார்கள். வெளிநாட்டைச் சார்ந்த தண்டனை சிறைவாசிகள் / நீதிமன்ற சிறைவாசிகள் / காவல் விசாரணை சிறைவாசிகள் ஆகியோர் சென்னை, புழல் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் வைக்கப்படுகின்றார்கள். கடுங்குற்றங்கள் புரிந்த பெண் சிறைவாசிகள் மாநிலத்தில் உள்ள ஐந்து பெண்கள் தனிச் சிறைகளில் வைக்கப்படுகின்றார்கள். காவல் மற்றும் விசாரணை பெண் சிறைவாசிகள் பெண்களுக்கான தனிக் கிளைச் சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் வைக்கப்பட்டு, பெண் பணியாளர்களால் மட்டுமே பாதுகாக்கப்படுகின்றனர்.

18 முதல் 21 வயதுக்குட்பட்ட, தண்டனைப் பெற்ற வளர்இளம் பருவத்தினர், புதுக்கோட்டையில் உள்ள பார்ஸ்டல் பள்ளியில் வைக்கப்படுகின்றார்கள். இதர விசாரணை / காவல் வளர்இளம் சிறைவாசிகள் ஏனைய 11 பார்ஸ்டல் பள்ளிகளில் வைக்கப்படுகின்றார்கள். திடமான உடல் நிலை மற்றும் மனநிலை, நன்னடத்தை, எளிதில் உணர்ச்சிவசப்படாத தன்மை மற்றும் விவசாயப் பின்னணி உடைய 21 வயதிலிருந்து 55 வயதிற்குட்பட்ட சிறைவாசிகள் திறந்தவெளிச் சிறைச்சாலைகளுக்கு மாற்றப்படுகின்றனர்.

## V. பாதுகாப்பு

### i) உயர் பாதுகாப்பு தொகுதிகள்

சிறைவாசிகளின் உரிமை மற்றும் கண்ணியத்திற்கு குறைவு ஏற்படாத வண்ணம் சிறைவாசிகளின் பாதுகாப்பு மற்றும் சிறைவாசிகள் சிறையிலிருந்து தப்பிப்பதைத் தடுப்பது ஆகியவற்றிற்கு சிறை நிர்வாகத்தில் உயர் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அனைத்து மத்திய சிறைகளிலும் உயர் பாதுகாப்பு தொகுதிகள் கட்டப்பட்டுள்ளன. இந்த உயர் பாதுகாப்பு தொகுதிகள் சிறைக் காவலர்களால் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன. கடலூர் மத்திய சிறை தவிர அனைத்து மத்திய சிறைகளின் வெளிப்புறம் காவல் துறையினரால் பாதுகாக்கப்படுகிறது. இந்த உயர் பாதுகாப்பு தொகுதிகளில், முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் தொடர்புடைய கடுங்குற்றங்கள் புரிந்த சிறைவாசிகள் வைக்கப்படுகின்றனர். அச்சிறைவாசிகள் அனைவரும் தினசரி மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் உயர் அலுவலர்களால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். அச்சிறைவாசிகளை நேர்காணல் செய்ய வரும் பார்வையாளர்களும் முழுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

சிறைகளில் எந்த அசம்பாவித நிகழ்வும் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு, நாச வேலைகளைத் தடுத்தல் குறித்த பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்திட, இத்துறையில் உள்ள மோப்பநாய் பிரிவும் பயன்படுத்தப்படுகிறது.

**ii) செல்லிடத்து தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள்**

சிறைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்கத்துடன் மாநிலத்தின் 9 மத்திய சிறைகளில் உள்ள 12 உயர் பாதுகாப்பு தொகுதிகளில் ரூ.5.40 கோடி செலவில் செல்லிடத்துத் தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் உயர்நுட்பக் கருவிகள் பொருத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**iii) ஊடுகதிர் அலகிடல் கருவிகள்**

போதைப் பொருட்கள், ஆயுதங்கள் மற்றும் பிற தடை செய்யப்பட்ட பொருட்கள் கடத்தப்படுவது மற்றும் குற்றம் சார்ந்த பொருட்கள் சிறையினுள் நுழைவதைத் தடுக்கும் பொருட்டு, 9 மத்திய சிறைகளில் ஊடுகதிர் அலகிடல் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

### iv) சிறைகள் மற்றும் நீதிமன்றங்களில் காணொலி கலந்துரையாடல் வசதிகள்

சிறைவாசிகளின் நீதிமன்றக் காவலை, அவர்களை நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தாமல் நீட்டிப்பதற்காக காணொலி கலந்துரையாடல் மூலம் சிறைகளையும் நீதிமன்றங்களையும் இணைக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, இத்திட்டம் அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் சிறை வளாகங்களை உள்ளடக்கிய 33 இடங்களிலும், 352 நீதிமன்றங்களை உள்ளடக்கிய 136 நீதிமன்ற வளாகங்களிலும் செயல்பாட்டில் உள்ளது. சிறைவாசிகளின் நீதிமன்றக் காவல் காணொலி கலந்துரையாடல் மூலம் நீட்டிக்கப்படுவதால், வழிக்காவலின் போது சிறைவாசிகள் தப்பித்தல் மற்றும் சிறைவாசிகள் மீதான தாக்குதல்கள் போன்ற அசம்பாவித நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்க உதவுவதோடு மட்டும் அல்லாமல், வழிக்காவல் மற்றும் போக்குவரத்திற்காக ஆகும் செலவைக் குறைக்கவும் உதவுகிறது. 30.06.2016 வரை விசாரணைக் காலம் நீட்டிப்பிற்காக மொத்தம் 12,23,094 சிறைவாசிகள் காணொலி கலந்துரையாடல் மூலம் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், காணொலிக் காட்சி மூலம் சிறைவாசிகளை நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தும் வசதியினை 6 மாவட்டச் சிறைகள், 4 கிளைச் சிறைகள் மற்றும்

5 பார்ஸ்டல் பள்ளிகளுக்கு ரூ.182.31 இலட்சம் செலவில் விரிவுபடுத்திட அரசாணை (நிலை) எண். 153, உள் (சிறை–4) துறை, நாள் 10.02.2016–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

### v) சிசிடிவி கேமராக்கள் (CCTV Cameras)

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளில் சிறைவாசிகள் மற்றும் பார்வையாளர்களின் நடமாட்டத்தைக் கண்காணித்திடும் வகையில், அச்சிறைகளில் தனிக் கவனம் தேவைப்படும் இடங்களில், ரூ.2.21 கோடி செலவில் கூடுதலாக 60 சிசிடிவி கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன.

### vi) வாக்கி டாக்கி கருவிகள்

அனைத்து மத்திய சிறைகள், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெண்கள் தனிச் சிறை, புழல், வேலூர், திருச்சி ஆகியவற்றில் உபரி மின்கலத்துடன் கூடிய புதிய வாக்கி டாக்கி கருவிகள் உபயோகத்தில் உள்ளன.

### vii) அலைபேசி மற்றும் இரும்பு உலோகம் கண்டறியும் அமைப்பினை நிறுவுதல்

தமிழ்நாடு புதுமை முயற்சித் திட்டத்தின் கீழ், சிறைகளின் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில், அரசாணை (நிலை) எண். 985, உள் (சிறை–4) துறை, நாள் 30.12.2015–ல், 9 மத்திய

சிறைகள் மற்றும் 3 பெண்கள் தனிச் சிறைகளில் அலைபேசி மற்றும் இரும்பு உலோகம் கண்டறியும் பாதுகாப்புக் கருவி நிறுவிட ரூ.159.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

## VI. சிறைவாசிகள் நலன்

### i) உணவு மற்றும் உடை

சுகாதாரமான சூழலில் சத்தான மற்றும் சரிவிகித உணவு, தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் தொகுதி II, அத்தியாயம் 22–ல் வரையறுக்கப்பட்ட அளவின்படி, சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகிறது. நோய்வாய்ப்பட்ட சிறைவாசிகளுக்கு மருத்துவ உணவுகளாக பால், ரொட்டி, முட்டை மற்றும் கோழி இறைச்சி ஆகியவை மருத்துவ அலுவலர்களின் பரிந்துரையின் பேரில் வழங்கப்படுகின்றன. இவை தவிர, அசைவ உணவு சாப்பிடும் அனைத்து சிறைவாசிகளுக்கும் வாரம் ஒரு முறை 115 கிராம் கோழி இறைச்சியும், சைவ உணவு சாப்பிடும் சிறைவாசிகளுக்கு, வாரம் ஒரு முறை உருளைக்கிழங்கு பொரியல், கேசரி மற்றும் ஒரு வாழைப்பழம் ஆகியவையும் வழங்கப்பட்டு வருகின்றன. சமையலறையில் எவர்சில்வர் பாத்திரங்களும், உணவினை எடுத்துச் செல்ல எவர்சில்வர் தள்ளுவண்டிகளும் பயன்படுத்தப்படுவதோடு, சிறைவாசிகளுக்கு உணவு வகைகள்

எவர்சில்வர் தட்டுகள் மற்றும் குவளைகளில் பரிமாறப்படுகின்றன.

பொங்கல் பண்டிகை, குடியரசு தினம், சுதந்திர தினம், மகாத்மா காந்தி பிறந்த நாள் போன்ற நாட்களில் சிறைவாசிகளுக்கு சிறப்பு உணவு அளிக்கப்படுகிறது. அரசாணை (நிலை) எண்.29, உள் (சிறை–3) துறை, நாள் 08.01.2015–ன்படி, மேற்கூறப்பட்டுள்ள நாட்களில் அளிக்கப்படும் சிறப்பு உணவிற்காக சிறைவாசி ஒருவருக்கு வழங்கப்பட்டு வந்த தொகையை ரூ.5/– லிருந்து ரூ.50/–ஆக இந்த அரசு உயர்த்தியுள்ளது.

நீண்டகாலமாக சிறைவாசிகளுக்கான உணவினை சமைப்பதற்கு கடலை எண்ணெய் பயன்படுத்தப்பட்டு வந்தது. கடலை எண்ணெய் கூடுதல் கொழுப்பை கொண்டுள்ளது என்பதால், இதனைத் தொடர்ந்து பயன்படுத்தினால் சிறைவாசிகளுக்கு பல்வேறு வகையான உடல்நலக் கேடுகள் ஏற்படலாம். எனவே, சிறைவாசிகளுக்கான உணவினைத் தயாரிக்க வாரத்தில் திங்கள் முதல் சனி வரை 6 நாட்கள் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெயையும், ஞாயிற்றுக்கிழமை நல்லெண்ணெயையும் உபயோகப்படுத்திட, அரசாணை (நிலை) எண்.371, உள் (சிறை–4) துறை, நாள் 20.05.2014–ல் ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சிறை நடைமுறை நூலில் வரையறுக்கப்பட்டவாறு சிறைவாசிகளுக்கான ஆடைகள் மற்றும் படுக்கைகள் வழங்கப்படுகின்றன. சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ‘ஆ’ வகுப்பு தண்டனை சிறைவாசிகளுக்கான சீருடை அரைக்கால் சட்டையிலிருந்து முழுக்கால் சட்டையாக மாற்றப்பட்டுள்ளது. தண்டனை சிறைவாசிகளுக்கு டெரிகாட்டன் முழுக்கால் சட்டைகள், மேல்சட்டைகள் மற்றும் பெரிய அளவிலான போர்வைகள் வழங்கப்படுகின்றன. விசாரணை சிறைவாசிகள் தமக்குத் தேவையான ஆடைகள் மற்றும் படுக்கைகளைக் கொண்டுவர அனுமதிக்கப்படுகின்றனர். போதிய ஆடைகள் இல்லாமலிருக்கும் விசாரணை சிறைவாசிகளுக்கு அரசு செலவில் போதுமான ஆடைகள் வழங்கப்படுகின்றன.

### ii) குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவுதல்

9 மத்திய சிறைகளில் ஒரு மணி நேரத்திற்கு 1000 லிட்டர் கொள்ளளவு கொண்டதும், 3 பெண்கள் தனிச் சிறைகள், புழல், வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியவற்றில் ஒரு மணி நேரத்திற்கு 500 லிட்டர் கொள்ளளவு கொண்டதுமான குடிநீர் சுத்திகரிப்புச் சாதனங்களை ரூ.51.75 இலட்சம் செலவில் வாங்கி நிறுவிட அரசாணை (நிலை) எண். 943, உள் (சிறை–4) துறை, நாள் 22.12.2015–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

### iii) சுகாதாரம் மற்றும் உடல் நலம் பேணுதல்

சிறைவாசிகளுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளித்திட போதிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள் இருப்பில் கொண்ட மருத்துவமனைகள், அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகள் ஆகியவற்றில் உள்ளன. இந்த மருத்துவமனைகளில் அனுபவமிக்க மருத்துவர்கள் துணை மருத்துவப் பணியாளர்களின் உதவியுடன் சிறைவாசிகளுக்கு சிகிச்சை அளிக்கின்றனர். தொடர் சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகள் சிறை மருத்துவமனைகளில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்படுகின்றனர். சிறப்பு சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகளை வெளி மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதற்காக அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், 4 மாவட்டச் சிறைகள் (ஸ்ரீவைகுண்டம், நாகர்கோவில், விருதுநகர் மற்றும் திண்டுக்கல்), 8 பெண்கள் கிளைச் சிறைகள் (துக்கலை, பரமக்குடி, நிலக்கோட்டை, மேட்டுப்பாளையம், கிருஷ்ணகிரி, கடலூர், திருவாரூர் மற்றும் லால்குடி) மற்றும் 2 தனிக் கிளை சிறைகளுக்கு (கொக்கிரகுளம் மற்றும் சேலம்) அவசர சிகிச்சை ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. சிறைவாசிகளுக்கு மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக, மருத்துவப் பரிசோதனைக் கூடங்கள்,

இதயத்துடிப்பை அறிய உதவும் சாதனங்கள் (E.C.G), இரத்தத்தை ஆய்வு செய்யும் தானியங்கி கருவிகள், கண்பார்வை பரிசோதனை செய்யும் கருவி (Ophthalmoscope), இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கண்டறியும் கருவி (Glucometer) மற்றும் எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய ஊடுகதிர் படமெடுக்கும் கருவி (Portable X-Ray Machine) ஆகியவை மத்திய சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட உடல் உபாதை தொடர்பாக அனைத்து சிறைவாசிகளையும் பரிசோதிக்க ஏதுவாக குறித்த கால இடைவெளியில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன.

நல வாழ்வு நடவடிக்கையாக சிறைகளில் புகை பிடித்தல் மற்றும் புகையிலை உபயோகித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. சிறைவாசிகளுக்கு எச்.ஐ.வி (H.I.V) பரிசோதனை செய்வதற்காக அனைத்து மத்திய சிறைகளிலும் ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையம் நிறுவப்பட்டுள்ளது. உரிய கலந்தாய்வுக்குப் பின்னர் அனைத்து சிறைவாசிகளும் எய்ட்ஸ் நோய் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

நோய்வாய்ப்பட்ட சிறைவாசிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மத்திய சிறை–I, புழல் மற்றும் மத்திய சிறை, மதுரை

ஆகிய சிறைகளில் உள்ள அவசர சிகிச்சை ஊர்திகளில் உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், சேலம் பெண்கள் தனிக் கிளைச் சிறை, திருச்சி மற்றும் புழல் பெண்கள் தனிச் சிறை, பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை, மத்திய சிறை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகியவற்றில் உள்ள மருத்துவமனைகளுக்கு அடிப்படை மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

சிறைவாசிகளிடையே ஒட்டுநோய் பரவுவதைத் தடுப்பதற்காக, கத்தி மூலம் முகச்சவரம் செய்யும் முறை விட்டொழிக்கப்பட்டுள்ளது. தற்போது ஆண்டொன்றுக்கு ரூ.43.68 இலட்சம் செலவில், பயன்படுத்திய பின்னர் தீர்வு செய்யக்கூடிய சவர ரேசர்கள் ஒவ்வொரு சிறைவாசிக்கும் மாதம் ஒன்றிற்கு இரண்டு வீதம் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறைவாசிகளை தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்பதற்காக மேற்கூறிய நடவடிக்கைகள் மட்டுமின்றி தற்போதுள்ள சுகாதார வசதிகள் ரூ.3.60 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், 9 மத்திய சிறைகள், 3 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றிலுள்ள

மருத்துவமனைகள் மற்றும் 30 அவசர ஊர்தி வாகனங்களுக்கு ரூ.2.19 கோடி செலவில் 13 வகையான உயிர்காக்கும் மருத்துவ உபகரணங்கள் வாங்கிட அரசாணை (நிலை) எண்.150, உள் (சிறை–4) துறை, நாள் 10.02.2016–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

### iv) DOTS மையம்

சிறைவாசிகளிடையே காசநோயை முற்றிலும் ஒழித்திட அனைத்து மத்திய சிறைகளிலும் DOTS (Directly Observed Treatment Strategy) மையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

### v) உடல் மற்றும் மனநலம்

நீண்ட காலமாக சிறைவாசிகள் சிறையில் தண்டனையைக் கழிப்பது அவர்களின் மன இறுக்க அளவினை உயர்த்தி விடும். அதிக மன இறுக்கமானது, அவர்களில் வன்முறை செயல்பாடு, மன அழுத்தம் மற்றும் தற்கொலை எண்ணங்களாக வெளிப்படுகின்றன. எனவே அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் மனஇயல் நிபுணர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களது பணி, மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் வன்முறை நடத்தைகளை

வெளிப்படுத்தும் குணமுடைய சிறைவாசிகளுக்கு ஆலோசனை வழங்கி சிகிச்சை அளிக்க பயன்படுத்தப்படுகிறது. மனநல ஆலோசனையானது, மன அழுத்தத்தால் அவதியுறும் சிறைவாசிகளின் மனதில் நம்பிக்கையை விளைவிப்பதால், தன்னம்பிக்கை மூலம் தற்கொலை எண்ணம் அகற்றப்படுகிறது.

மனநல சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகளுக்கு, சென்னை அரசு மனநல காப்பகத்திலும், அரசு மருத்துவமனைகளில் உள்ள மனவியல் நிபுணர்களைக் கொண்டும் தேவைக்கேற்ப சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மத்திய சிறைகளில் உள்ள, மனதளவில் பாதிக்கப்பட்ட சிறைவாசிகளின் மனநலனை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மத்திய சிறையிலும் இரண்டு ஆற்றுப்படுத்துநர்கள் (Counsellors) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சிறைவாசிகளுக்கு மனநல ஆலோசனை வழங்குவதுடன், உடற்பயிற்சி, யோகா, தியானம், உள் மற்றும் வெளியரங்கு விளையாட்டு வசதிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தற்போது 19 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அனைத்து சிறைகளிலும் செயல்பட்டு வரும் நூலகங்களிலிருந்து சிறைவாசிகள் புத்தகங்களைப் பெற்று

பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வசதிகள் பொழுதுபோக்கு அம்சங்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல் சிறைவாசிகளின் மன நலம் மேம்படவும் உதவுகின்றன.

### vi) வானொலிப் பெட்டி வசதி

வானொலிப் பெட்டியில் ஒலிபரப்பப்படும் இசை மற்றும் இதர நிகழ்ச்சிகள், சிறைவாசிகளின் மன இறுக்கத்தை பெருமளவில் தளர்த்துகின்றன. சிறைவாசிகளது தனிமை மற்றும் அச்ச உணர்வினை மட்டுப்படுத்துவதற்காக அலைபெருக்கியுடன் கூடிய **96** பண்பலை வானொலிப் பெட்டிகள் மற்றும் **384** ஒலிப்பெருக்கிகள் ரூ.**14.55** இலட்சம் செலவில் அனைத்து கிளைச் சிறைகளுக்கும் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

### vii) மனித உரிமை பாதுகாப்பு

சிறைவாசிகளின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு சிறை நிர்வாகத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இப்பொருள் குறித்து சிறை அலுவலர்களுக்கு போதுமான கூர்ந்துணர்வு ஏற்படுத்தப்படுவதுடன், அவர்களுக்கு அளிக்கப்படும் அனைத்துப் பயிற்சிகள் மற்றும் புத்தாக்கப் பயிற்சிகளில் சிறைவாசிகளின் மனித உரிமைகள் தொடர்பான கருத்துக்கள்

இடம் பெறுகின்றன. சிறை நிர்வாகம் மற்றும் சிறைவாசிகள் நடத்தப்படும் முறை குறித்து ஆய்வு செய்வதற்கு அலுவல் சார்ந்த பார்வையாளர்கள் குறித்த கால இடைவெளியில் சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். சிறைவாசிகளுக்கு அடிப்படைத் தேவைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும் அவர்கள் நடத்தப்படும் விதத்தையும் அறிய மனித உரிமை ஆணையங்களின் உறுப்பினர்கள், மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் இதர முக்கியப் பிரமுகர்களும் சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். இவை தவிர, சிறைகளை திடீர் பார்வையிட்டு அங்கு மனித உரிமை மீறல்கள் ஏதேனும் உள்ளனவா என்று சோதனை செய்திட பொதுமக்களில் 48 நபர்கள் அலுவல்சாரா பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறைகளுக்கு வருகை புரிந்துள்ள தேசிய மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையங்களின் உறுப்பினர்களும் மற்றும் மாண்புமிகு நீதிபதிகளும் இம்மாநிலத்தின் சிறை நிர்வாகத்தை பாராட்டி உள்ளனர் என்பது இங்கு பெருமையுடன் கூறத்தக்கதாகும்.

**viii) சிறை தொழிற்கூடங்களில் பணிபுரியும் சிறைவாசிகளின் ஊதிய உயர்வு**

தண்டனை பெற்ற சிறைவாசிகளுக்கிடையே உழைப்பின் அவசியத்தை மனதில் ஆழப் பதிய வைக்க ஏதுவாக சிறை

தொழிற்சாலைப் பணிகளில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டு, அத்தகைய பணியில் அவர்கள் பெற்ற திறனின் அடிப்படையில் செயற்திறன் பெற்றோர், ஓரளவு செயற்திறன் பெற்றோர், செயற்திறன் பெறாதோர் என்று வகைப்படுத்தப்பட்டு அதற்கேற்ப ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய வகைப்பாட்டின்படி, இதற்கு முன்னர் நாள் ஒன்றுக்கு ஒரு சிறைவாசிக்கு முறையே ரூ.60/–, ரூ.50/– மற்றும் ரூ.45/– ஊதியமாக வழங்கப்பட்டு வந்தது. அக்டோபர் 2011 முதல் இந்த ஊதியம் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது :–

- செயற்திறன் பெற்றோர் ரூ.100/–
- ஓரளவு செயற்திறன் பெற்றோர் ரூ. 80/–
- செயற்திறன் பெறாதோர் ரூ. 60/–

தற்போது சிறை தொழிற்கூடங்களில் பணிபுரியும் சிறைவாசிகளுக்கு மேற்கண்ட உயர்த்தப்பட்ட ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

### ix) குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுடன் சிறைவாசிகள் நேர்காணல்

சிறைவாசிகள், தங்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களுடன் தொடர்பில் இருப்பதற்கு வசதியாக உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அவர்களை நேர்காணல் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை நேர்காணல்

செய்யும் தேவைக்காக விலையில்லா விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படுகின்றன. மேலும் இவ்விண்ணப்பப் படிவங்களை சிறைத்துறையின் இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். வெகு தூரத்தில் இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் எவ்வித இடையூறுமின்றி எளிதாக நேர்காணலுக்கு விண்ணப்பிக்க இந்த வசதி உதவுகிறது. சிறைவாசிகளை நேர்காணல் செய்வதற்கு தொலைபேசியின் வாயிலாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் முன் அனுமதியும் பெறலாம்.

### x) சிறப்பு நேர்காணல்

ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற அனைத்து நாட்களிலும் சிறைவாசிகளை வழக்குரைஞர்கள் நேர்காணல் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் சனிக்கிழமையன்று வழக்குரைஞர்களுக்காக பிற்பகல் 1.00 மணிவரை சிறப்பு நேர்காணல் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பள்ளி, கல்லூரிக்கு செல்லும் குழந்தைகள் மற்றும் வேலைக்கு செல்லும் சிறைவாசிகளின் கணவன் அல்லது மனைவியின் வசதிக்காக ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பு நேர்காணல் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### xi) பார்வையாளர் மேலாண்மைத் திட்டம்

அனைத்து மத்திய சிறைகள், மூன்று பெண்கள் தனிச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளிலுள்ள சிறைவாசிகளை காண வரும் பார்வையாளர்கள் குறித்த விவரங்களை சேகரிக்கவும், நேர்காணல் முறையை சீரமைக்கவும் எளிய வழிமுறைகளைக் கொண்ட பார்வையாளர்கள் மேலாண்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ.1.30 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

### xii) சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக சிறைகளில் தொலைபேசி வசதி அறிமுகப்படுத்துதல்

சிறைவாசிகள் தங்களது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வழக்குரைஞர்களுடன் கலந்துரையாட ஏதுவாக 9 மத்திய சிறைகள், 3 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் ரூ.2.01 கோடி செலவில் 54 தொலைபேசிகூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த வசதியின் மூலம் சிறைவாசிகள் அவர்களது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வழக்குரைஞர்களை தொலைபேசியின் வாயிலாக தொடர்பு கொள்ள முடிவதால் அவர்களின் மன அழுத்தம் வெகுவாகக் குறைகிறது. 30.06.2016 அன்றுள்ளவாறு,

சிறைவாசிகளால் இவ்வசதியானது **3,75,671** முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ள தொலைபேசி வசதியை உபயோகிக்கும் எண்ணிக்கையை ஒவ்வொரு சிறைவாசிக்கும் மாதம் ஒன்றுக்கு **3** முறையிலிருந்து **5** முறையாகவும், பேசும் நேரத்தை **30** மணித் துளிகளிலிருந்து **45** மணித் துளிகளாகவும் அதிகரித்து அரசாணை (டி) எண்.775, உள் (சிறை—3) துறை, நாள் **27.10.2015**—ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், சிறைவாசிகளுக்கான தொலைபேசி வசதியை **9** மாவட்டச் சிறை மற்றும் **2** திறந்தவெளிச் சிறைகளுக்கு ரூ.**99.29** இலட்சம் செலவில் விரிவுபடுத்திட அரசாணை (நிலை) எண்.**990**, உள் (சிறை—3) துறை, நாள் **31.12.2015**—ல் ஆணையிடப்பட்டுள்ளது.

### xiii) பெண் சிறைவாசிகளின் நலன்

சிறையினுள் அனுமதிக்கப்படும்போதும் அதன் பின்னரும், பெண் சிறைவாசிகள் பெண் உதவி மருத்துவரால் பரிசோதனை செய்யப்பட்டு, பரிசோதனைக் குறிப்புகள் மருத்துவ அறிக்கையில் பதிவு செய்யப்படுகின்றன. கர்ப்பிணிப் பெண் சிறைவாசிகளின் அன்றாடத் தேவைகளுக்கு முன்னுரிமை

அளிக்கப்படுகிறது. மகளிர் நோய் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் பேறுகாலத்திற்கு முன்னரும் பின்னரும் ஒவ்வொருவருக்கும் தேவையான கவனம் செலுத்தப்படுகிறது. சிறைக்கு வெளியே பிரசவிக்க ஏதுவாக கர்ப்பிணி சிறைவாசிகளுக்கு அவசரகால விடுப்பு வழங்கப்படுகிறது. பெண் சிறைவாசிகளுக்கு விலையில்லா சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்படுகின்றன.

உறவினர்களிடம் ஒப்படைக்க இயலாத மற்றும் தகுந்த அக்கறை செலுத்துவோர் எவரும் இல்லாத நிலையில் உள்ள 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் சிறையில் பிறந்து கவனிப்போர் எவரும் இல்லாத நிலையில் உள்ள குழந்தைகள், 6 வயது வரை தாயுடன் சிறையில் இருப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்காக பெண்கள் தனிச் சிறைகளில் காப்பகம் மற்றும் வளர்ப்பிடம் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. பாலூட்டும் பெண் சிறைவாசிகள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு அரை லிட்டர் பால் வழங்கப்படுகிறது. வளரும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் ஊட்டத்தை கருத்தில் கொண்டு பெண் சிறைவாசிகளுடன் உள்ள ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவ

அலுவலரின் பரிந்துரையின் பேரில், 'கிளாஸ்கோ' அல்லது 'அமுல்' போன்ற குழந்தை உணவுகள் வழங்கப்படுகின்றன.

**xiv) சீர்திருத்தப் பணிகள்**

**சிறைவாசிகளின் மறுவாழ்வு மற்றும் மறுஒருங்கிணைப்பு**

சிறைவாசிகளின் மறுவாழ்விற்காகவும், விடுதலைக்குப் பின்னர் சமுதாயத்தில் அவர்கள் மீண்டும் இணைந்து வாழ உதவும் வகையிலும் தமிழகச் சிறைகளில் பல்வேறு புதுமையான சீர்திருத்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்வி, தொழிற்கல்வி மற்றும் சிறைத் தொழிற்கூடங்களில் செய்முறை அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த திட்டங்கள், சிறைவாசிகள் விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்புப் பெறவோ அல்லது சொந்தமாக தொழில் அமைத்துக் கொள்ளவோ ஏதுவாக இருந்து வருகின்றன.

**xv) கல்வி மற்றும் தொழிற்கல்வி**
**மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரிகள்**

சிறைவாசிகள் 100 சதவீத கல்வி அறிவை அடையும் பொருட்டு, மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகமும், தமிழ்நாடு அரசின் கல்வித் துறையும் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை தொடங்கியுள்ளன. இந்திராகாந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக்கழகமும்

சிறைவாசிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு பாடப்பிரிவுகளை நடத்தி வருகிறது.

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன. விடுதலைக்குப் பின்னர் சிறைவாசிகள் இலாபகரமான பணிகளில் ஈடுபடும் வண்ணம் அவர்களை தயார்படுத்தும் நோக்கில் பல்வேறு கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு வழங்கப்படும் கல்வி, சிறைவாசிகள் ஏற்கனவே பெற்றுள்ள கல்வி அறிவின் அடிப்படையில் (i) ஆரம்பக் கல்வி, (ii) தொடக்கக் கல்வி, (iii) மேல்நிலைக் கல்வி, (iv) திறந்தவெளி பல்கலைக்கழகங்கள் மூலமாக பட்டப்படிப்பு மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பு மற்றும் (v) சிறைவாசிகளுக்கு வேலைவாய்ப்பு சார்ந்த பயனுள்ள பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு என வகைப்படுத்தப்படுகிறது. ஆசிரியர் பணிக்கு தகுதி பெற்ற சிறைவாசிகளைக் கொண்டு சிறையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஆரம்பப் பள்ளிகள், அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்

சிறைகள் மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி ஆகியவற்றில் செயல்பட்டு வருகின்றன. சிறைவாசிகளுக்கு அஞ்சல்வழிக் கல்வி வசதி அரசு செலவில் வழங்கப்படுகிறது. 2015–2016 ஆம் ஆண்டில் மொத்தம் 6,781 சிறைவாசிகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு பாடப்பிரிவுகளைத் தொடர்ந்து பயின்று வந்துள்ளனர்:–

| **பாடப்பிரிவு** | **சிறைவாசிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| அடிப்படைக் கல்வி (7ஆம் வகுப்பு வரை ஆயத்த படிப்பு) | 2,898 |
| எழுத்தறிவு திட்டக்கல்வி (மாநில ஆதார மையம் வழியாக) | 2,235 |
| கணினி முதுகலை பட்டப்படிப்பு | 1 |
| கலை / அறிவியில் முதுகலை பட்டப்படிப்பு | 50 |
| கலை / அறிவியில் / வணிகவியல் / இலக்கியம் இளங்கலை பட்டப்படிப்பு | 69 |
| வணிக மேலாண்மை முதுகலை பட்டப்படிப்பு / முதுகலை சட்டப்படிப்பு | 10 |
| வணிக மேலாண்மை இளங்கலை பட்டப்படிப்பு | 4 |
| 8, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு | 818 |
| பட்டயப்படிப்பு / சான்றிதழ் படிப்பு | 635 |
| அடிப்படை ஆயத்தப் படிப்பு | 61 |
| **மொத்தம்** | **6,781** |

2012–2013 ஆம் ஆண்டில், பட்டயப் படிப்புக்கான தேர்வு எழுதிய 220 சிறைவாசிகளில், 218 சிறைவாசிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். 2013–2014 ஆம் ஆண்டில் பட்டயப் படிப்புக்கான தேர்வு எழுதிய 253 சிறைவாசிகளில், 230 சிறைவாசிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். 2014–2015 ஆம் ஆண்டில், பட்டயப் படிப்புக்கான தேர்வு எழுதிய 159 சிறைவாசிகளில், 136 சிறைவாசிகள் பல்வேறு பட்டயப் படிப்புகளில் தேர்ச்சி பெற்றுள்ளனர். (தேர்ச்சி விகிதம் 85.5 சதவீதம்). 2015–2016 ஆம் ஆண்டில் பட்டயப் படிப்புக்காக 118 சிறைவாசிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2015–2016 ஆம் ஆண்டில், 12ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய 103 சிறைவாசிகளில், 94 சிறைவாசிகளும், 10ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய 250 சிறைவாசிகளில், 199 சிறைவாசிகளும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

ஒரு புதிய முயற்சியாக, திருச்சி மத்திய சிறையில் தொழிற்பயிற்சி மையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அம்மையத்திற்கு முதல்வர் மற்றும் பயிற்றுநர்கள் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக அரசாணை (நிலை) எண்.580, உள் (சிறை–3) துறை, நாள் 06.08.2015–ல் ரூ.381.92 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அப்பயிற்சி மையம் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்

நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. 155 சிறைவாசிகள் கீழ்க்கண்டவாறு தொழிற்கல்வி பயின்று வருகின்றனர்:–

| வ. எண் | தொழிற் பயிற்சியின் பெயர் | காலம் | பயிலும் சிறைவாசிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பிட்டர் | 2 வருடம் | 19 |
| 2 | மின் கம்பியாளர் | 2 வருடம் | 20 |
| 3 | கணினி இயக்குநர் மற்றும் மென்பொருள் உதவியாளர் | 1 வருடம் | 51 |
| 4 | வெட்டுதல் மற்றும் தைத்தல் | 1 வருடம் | 36 |
| 5 | வெல்டர் (வாயு மற்றும் மின்சாரம்) | 1 வருடம் | 29 |
| மொத்தம் | | | 155 |

**xvi) சிறைத் தொழிற்சாலைகளில் தொழிற்பயிற்சித் திறன் பெறுதல் மற்றும் தொழில் உற்பத்தியில் பங்குபெறுதல்**

சிறைவாசிகள் விடுதலை பெற்ற பின்னர், மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் இருப்பதற்காகவும், அவர்கள் நல்ல வேலைவாய்ப்புப் பெற ஏதுவாகவும், அவர்களது வாழ்வாதாரத்திற்கு தேவைப்படும் திறன் மற்றும் உற்பத்தித் திறனில் செய்முறை பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும் தண்டனை காலத்தில் சிறைவாசிகளுக்கு உழைப்பின்

அவசியத்தை உணர்த்தவும், புதுத்திறன்களைக் கற்பிக்கவும், முத்திரை அரக்கு தொழிற்கூடம், நெசவுத் தொழிற்கூடம், காலணி தொழிற்கூடம், புத்தகம் கட்டுதல், கோர்பான்கள் உற்பத்தி, சலவை சோப்பு தயாரிக்கும் தொழிற்கூடம், தையற்கூடம், அடுமனை தொழிற்கூடம், கைமுறை காகிதக்கூடம், தோட்டக்கலை மேம்பாடு, விவசாய உற்பத்தி, இயற்கை உர உற்பத்தி போன்ற பல்வேறு தொழிற்கூடங்கள் சிறைச்சாலைகளில் நிறுவப்பட்டுள்ளன. இத்தொழிற்கூடங்கள் தவிர, நிலக்கரி சாம்பல் மூலம் செங்கல் தயாரிக்கும் பிரிவு, சானிட்டரி நாப்கின் மற்றும் எல்.ஈ.டி விளக்குகள் உற்பத்தி மற்றும் பயிற்சிக்கூடம் ஆகியவையும் சிறைச்சாலைகளில் சமீபத்தில் நிறுவப்பட்டுள்ளன.

சிறைத்துறை ‘சேவைத் துறை’ என்ற வகையில் பல்வேறு அரசுத் துறைகளுக்கு பொருட்கள் வழங்குவதில் சிறப்புரிமை பெற்றுள்ளது. சிறைகளில் தயாரிக்கப்படும் பொருட்களான, சீருடைத் துணி, பெல்ட், தொப்பி, சீருடைக் காலணிகள், மழைமேலங்கி (raincoat), கொசுவலை போன்றவை காவல், சிறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகியத் துறைகளுக்கும், முத்திரை அரக்கு, கோர்ப்பான், கோப்பு அட்டை, தபால் உறை, கட்டு மற்றும் காரத்துணி, சலவை சோப்பு மற்றும் பிற துணிவகைகள், தீ வாளிகள், மருந்துப் பெட்டகங்கள்

(Bed-side Lockers) போன்றவை பல்வேறு அரசுத் துறைகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஐந்தாண்டுகளில் சிறைத் தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு பின்வருமாறு:-

| வ.எண். | ஆண்டு | ரூபாய் (இலட்சம்) |
|---|---|---|
| 1 | 2011–2012 | 607.16 |
| 2 | 2012–2013 | 958.04 |
| 3 | 2013–2014 | 1308.93 |
| 4 | 2014–2015 | 3697.25 |
| 5 | 2015–2016 | 4017.12 |

2015–2016 ஆம் ஆண்டில், சிறைத் தொழிற்கூடங்களின் உற்பத்தி மதிப்பு முன்னர் எப்போதுமில்லாத அளவுக்கு அதிகபட்சமாக ரூ.4017.12 இலட்சமாக உயர்ந்துள்ளது.

சிறைத்துறை தொழிற்கூடங்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள் தங்கு தடையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக ''மூலப் பொருள் வங்கி'' ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாணை (நிலை) எண்.9, உள் (சிறை–3) துறை, நாள் 05.01.2015–ல் ரூ.5.00 கோடி சுழல் நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

### xvii) தண்டனைக் குறைப்பு முறையினை ஒழுங்குபடுத்துதல்

சிறைவாசிகள் தங்களது நடத்தையை மாற்றிக் கொள்ள ஏதுவாக அவர்களிடத்தில் நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் செயல்நோக்கக் காரணிகளில் தண்டனைக் குறைப்பும் ஒன்றாகும். எனவே தண்டனைக் குறைப்பு முறையினை மேலும் சீரிய முறையில் செயலாக்கம் செய்திட அனைத்து 9 மத்திய சிறைகளிலும் ஒரு மத்திய சிறைக்கு ஒரு அலுவலகக் கண்காணிப்பாளர் பணியிடம் வீதம் 9 அலுவலகக் கண்காணிப்பாளர் பணியிடங்கள் ஆண்டொன்றுக்கு ரூ.29.68 இலட்சம் தொடர் செலவினத்தில் தோற்றுவிக்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### xviii) சிறைவாசிகளின் குறை தீர்க்கும் செயலாக்க முறை

சிறைவாசிகளின் குறைகளைத் தீர்வு செய்வதற்கு சிறைத்துறை முன்னுரிமை அளித்து வருகிறது. சிறைவாசிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க ஏதுவாக, அனைத்து மத்திய சிறைகளிலும், மூடி முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளன்று மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியால் இந்தப் புகார் பெட்டிகள் திறக்கப்பட்டு புகார்கள் உரிய நடவடிக்கைக்காக தொடர்புடைய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதுதவிர,

அமர்வு நீதிபதிகள் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர்களும் மாதம் ஒருமுறை சிறைகளுக்கு திடீர் வருகை புரிந்து சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் இதர வசதிகளை ஆய்வு செய்வதுடன், அவர்களின் குறைகளையும் கேட்டு அறிகின்றனர். கூடுதல் காவல்துறை இயக்குநர் / சிறைத்துறைத் தலைவரும், சிறைத்துறைத் துணைத் தலைவர்களும், சிறைகளில் வருடாந்திர ஆய்வு மேற்கொள்ளும்போது, ஒவ்வொரு சிறைவாசியின் குறைகளையும் கேட்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

சிறைக் கண்காணிப்பாளர்கள் ஒவ்வொரு வாரமும் அனைத்து சிறைவாசிகள் ஆய்வு அணிவகுப்பினை நடத்துகின்றனர். அப்போது சிறைவாசிகளது குறைகளைக் கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்கின்றனர்.

### xix) சிறை நீதிமன்றங்கள்

சிறு வழக்குகளுக்கு விரைவில் தீர்வு காணும் வகையிலும், சிறைகளில் இட நெருக்கடியைக் குறைக்கவும், அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் சிறை நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீதித்துறை நடுவர்கள் சுழற்சி முறையில் இந்த சிறை நீதிமன்றங்களுக்கு வருகை

புரிந்து குற்றங்களை ஒப்புக் கொள்ளும் சிறைவாசிகளது வழக்குகளைத் தீர்வு செய்கின்றனர். மேலும், **23.01.2016** அன்று மாவட்ட இலவச சட்ட உதவிக்குழு தலைவர் மற்றும் வட்டார இலவச சட்ட உதவிக்குழு தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சிறப்பு சிறை நீதிமன்றங்களில் அந்தந்த மாவட்ட மற்றும் வட்டாரத்திற்குட்பட்ட **433** வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

### xx) இலவச சட்ட உதவி

சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆணைக்குழு, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் தலா ஒரு இலவச சட்ட உதவி மையத்தை அமைத்துள்ளது.

### xxi) விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பு கோரும் விடுதலைப் பெற்ற சிறைவாசிகளை பணியமர்த்துவதற்காக, சிறைவாசிகள் பெற்றுள்ள திறன், சிறைவாசி விடுதலையாகும் நாள், சிறைவாசியின் இருப்பிடத்திற்கு அருகில் சிறைவாசி பெற்றுள்ள திறன் தொடர்புடைய தொழிற்கூடங்கள் உள்ளனவா போன்ற

விவரங்கள் முன்கூட்டியே சேகரிக்கப்படுவதன் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

## VII. சிறைத்துறைப் பணியாளர்கள் நலன்

### i) உங்கள் சொந்த இல்லத் திட்டம்

காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் 47.6 ஏக்கர் நிலப்பரப்பில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைத் துறைப் பணியாளர்களுக்காக ரூ.455.55 கோடி செலவில் 2673 வீடுகளைக் கட்டுவதற்கான இந்த தனித்துவமான திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 26.10.2012 அன்று துவக்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் கீழ் அடுக்குமாடி வீடு ஒதுக்கீடு பெற்ற 35 சிறைத் துறைப் பணியாளர்களுக்கு அரசு வீடுகட்டும் முன்பணம் வழங்க அரசாணை (நிலை) எண்.119, உள் (காவல்–10) துறை, நாள் 18.02.2014–ல் ரூ.376.43 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேலும் 13 சிறைப் பணியாளர்கள் வங்கிக் கடன் மூலம் அடுக்குமாடி வீடு ஒதுக்கீடு பெற்றுள்ளனர். இக்குடியிருப்புகளில் பணிகள் நிறைவடைந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 25.02.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது.

## ii) 100 பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல்

2013–2014 ஆம் ஆண்டில், ரூ.1194.12 இலட்சம் செலவில், மத்திய சிறை, கடலூர், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் மொத்தம் 100 பணியாளர் குடியிருப்புகளைக் கட்ட அரசாணை (நிலை) எண். 1019, உள் (சிறை–4) துறை, நாள் 27.11.2013–ல் ஆணையிடப்பட்டு, குடியிருப்பின் உட்பரப்பளவு 550 சதுர அடியிலிருந்து 650 சதுர அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இப்பணிகள் நிறைவடைந்தன.

2014–2015 ஆம் ஆண்டில், ரூ.1175.65 இலட்சம் செலவில், மத்திய சிறை, புழல், வேலூர், கடலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மொத்தம் 100 பணியாளர் குடியிருப்புகளைக் கட்ட அரசாணை (நிலை) எண்.70, உள் (சிறை–4) துறை, நாள் 27.01.2015–ல் ஆணையிடப்பட்டு, பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

மேலும், 2015–2016 ஆம் ஆண்டில், ரூ.1216.64 இலட்சம் செலவில், மத்திய சிறை, புழல், பாளையங்கோட்டை, கோயம்புத்தூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் 100 குடியிருப்புகளைக் கட்ட அரசாணை (நிலை) எண். 154,

உள் (சிறை—4) துறை, நாள் 10.02.2016—ல் ஆணையிடப்பட்டு, பணிகள் ஆரம்ப கட்டத்தில் உள்ளன.

### iii) மிகை நேரப் பணி ஊதியம்

வாராந்திர ஓய்வு நாளன்று பணிபுரியும் முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு மிகை நேரப் பணி ஊதியம் ரூ.200/— வழங்கப்படுகிறது.

### iv) இரவு உணவுப்படி

சிறைத்துறை காவலர்களுக்கு இரவு உணவுப்படியாக ரூ.100/— வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அரசாணை (நிலை) எண். 945, உள் (சிறை—2) துறை, நாள் 22.12.2015—ன்படி இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, சிறைகளில் இரவு நேரங்களில் பணிபுரியும் முதல் தலைமை சிறைக் காவலர்களுக்கும் இரவு உணவுப்படி வழங்கப்படுகிறது.

### v) இடர்படி, உணவுக் கட்டணம், தையற் கட்டணம் மற்றும் சலவைப்படி

அ) காவல் துறையினருக்கு இணையாக, சிறைத் துறையினருக்கு வழங்கப்படும் இடர்படி இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரை மாதம் ரூ.400/— ஆகவும், சிறை அலுவலர் முதல் கண்காணிப்பாளர்

வரை மாதம் ரூ.450/– ஆகவும், நவம்பர் 2013 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

ஆ) நெருக்கடி நிலையின் போதும், பெருந்திரளானவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அனுமதிக்கப்படும்போதும், சென்னையைத் தவிர இதர மத்திய சிறைகளில் பாதுகாப்புப் பணிகளில் அமர்த்தப்படும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு ரூ.35/– வீதமும், முதல் நிலை / முதல் தலைமை சிறைக் காவலர்களுக்கு ரூ.40/– வீதமும், துணை சிறை அலுவலர் வரையிலான மற்ற அனைவருக்கும் ரூ.50/– வீதமும், சென்னை நகரில் உள்ள துணை சிறை அலுவலர் வரையிலான அனைத்து சிறைத் துறையினருக்கும் ரூ.80/– வீதமும், உணவுக் கட்டணமாக வழங்கப்பட்டு வருகிறது.

இ) சிறைத்துறையில் உள்ள இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான அனைத்துப் பணியாளர்களுக்கும் ஒரு சீருடை தைப்பதற்கு வழங்கப்பட்டு வரும் தையற் கட்டணம் ரூ.250/–ல் இருந்து ரூ.450/– ஆக அக்டோபர் 2013 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

ஈ) இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான சிறைத்துறையினருக்கு

வழங்கப்பட்டு வந்த சலவைப்படி மாதம் ரூ.200/—லிருந்து ரூ.250/— ஆக ஆகஸ்ட் 2012 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

### vi) மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள்

இரண்டாம் நிலை சிறைக் காவலர் நிலையிலிருந்து துணை சிறை அலுவலர் வரையிலான பணியாளர்களுக்கு நியாய விலைக் கடைகளின் மூலம் விலையில்லா அரிசியும், விற்பனை விலையில் 50 சதவிகிதத்தில் கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு ஆகியவையும் வழங்கப்படுகின்றன.

### vii) காவல்துறை சிறப்பு அங்காடிகளில் மானிய விலையில் பொருட்கள் பெறுதல்

காவல்துறை சிறப்பு அங்காடிகளில் (Police Canteens) மானிய விலையில் வழங்கப்படும் பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் வசதி, அரசாணை (நிலை) எண்.421, உள் (காவல்—17) துறை, நாள் 08.06.2012—ல் சிறைத் துறையினருக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### viii) சிறை களப் பணியாளர்களுக்கு மழைமேலங்கிகள் (raincoats) மற்றும் கொசுவலைகள் வழங்குதல்

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், கிளைச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளிகள் மற்றும் திறந்தவெளிச் சிறைகள் ஆகியவற்றில் பணிபுரியும் களப் பணியாளர்களின் பயன்பாட்டிற்காக 3 வருடத்திற்கு ஒரு முறை மழைமேலங்கிகள் மற்றும் கொசுவலைகள் ரூ.4.73 இலட்சம் செலவில் வாங்கி வழங்கிட அரசாணை (நிலை) எண். 946, உள் (சிறை–3) துறை, நாள் 22.12.2015–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

### ix) குழுக் காப்பீட்டுத் திட்டம்

பணியில் இருக்கும்போதோ அல்லது விபத்தின் காரணமாகவோ இறக்க நேரிடும் பணியாளர்களுக்கு, சிறைத்துறையினருக்கான குழுக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையானது, அரசாணை (நிலை) எண்.503, உள் (சிறை–2) துறை, நாள் 04.07.2012–ல் ரூ.1.00 இலட்சத்திலிருந்து ரூ.2.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் சிறைத்துறை துணைத் தலைவர் முதல் இரண்டாம் நிலை சிறைக் காவலர் வரையிலான சிறைத்துறை களப்பணி அலுவலர்கள் பயன் பெறுவர்.

### x) தமிழ்நாடு சிறை நல நிதிக்கு வழங்கப்பட்டு வரும் இணை மானியத் தொகையினை உயர்த்துதல்

மாநில சிறைத்துறையில் பணியாற்றும் அரசிதழ் பதிவுறா அலுவலர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களுக்கு தமிழ்நாடு சிறை நல நிதியின் கீழ் பண உதவி மற்றும் இடருதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதியிலிருந்து, அவர்களுடைய உரிய தகுதிபெற்ற குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையும், நெடுநாட்பட்ட நோய்கள், நீண்டகால சிகிச்சை தேவைப்படும் உடற்காயங்கள் போன்ற விதிவிலக்கான நேர்வுகளில் பண உதவியும் வழங்கப்பட்டு வருகிறது. மறைந்த பணியாளர்களின் இடருற்ற குடும்பத்தினரும் தேவையான நேர்வுகளில் நிதி உதவி பெறுகின்றனர். மேற்குறிப்பிட்டுள்ள நிதிக்கு இணை மானியமாக அரசால் ரூ.3.00 இலட்சம் வழங்கப்பட்டு வந்தது.

இந்நிதியிலிருந்து உதவி கோரும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டு, இந்நிதிக்கு அரசால் வழங்கப்பட்டு வந்த இணை மானியத்

தொகை ரூ.3.00 இலட்சத்திலிருந்து ரூ.10.00 இலட்சமாக அரசாணை (நிலை) எண்.997, உள் (சிறை–1) துறை, நாள் 26.12.2014–ல் உயர்த்தப்பட்டுள்ளது.

2015–2016 ஆம் ஆண்டில், ரூ.12.58 இலட்சம் மதிப்பில் 230 பயனாளிகள் பயனடையும் வகையில் இந்நிதியிலிருந்து நிதியுதவி வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## xi) பதக்கங்கள்

பணிக் காலத்தில் வீரதீரத்துடனும், போற்றத்தக்க வகையிலும் சிறந்த பணிப்பதிவுருவைப் பேணும் சிறைத்துறை சீருடைப் பணியாளர்களின் திறமையை அங்கீகரித்து, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் கீழ்க்கண்ட பதக்கங்கள் வழங்கப்படுகின்றன:-

### தமிழ்நாடு முதலமைச்சரின் சிறைச்சாலை சேவைக்கான பதக்கம் – அண்ணா பதக்கம்

ஒவ்வொரு ஆண்டும் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு 10 சிறைத்துறை பணியாளர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் தொகையை அரசாணை (நிலை) எண்.890, உள் (மிகக் கமுக்கம்) துறை, நாள் 20.12.2011–ல் பின்வருமாறு அரசு உயர்த்தியுள்ளது:–

| | | |
|---|---|---|
| 1. | சிறை அலுவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரை | ரூ.10,000/– |
| 2. | உதவி சிறை அலுவலர் மற்றும் துணை சிறை அலுவலர் | ரூ. 6,000/– |
| 3. | இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் முதல் தலைமை சிறைக் காவலர் வரை | ரூ. 4,000/– |

**தமிழ்நாடு முதலமைச்சரின் சிறை நற்பணிப் பதக்கம்–பொங்கல் பதக்கம்**

ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 60 முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு அவர்கள் ஆற்றிய நற்பணிக்காக இப்பதக்கம் வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறுவோருக்கு மாதந்தோறும் ரூ.200/– பதக்கப் படியாக வழங்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம்**

முந்தைய திட்டத்தின்படி தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம் பெறுவோருக்கு மாதாந்திரப் படியாக ரூ.300/– வழங்கப்பட்டு வந்தது. தற்போது, முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம் பெறுவோருக்கு, அவர்கள் எந்தப் பதவியிலிருந்தாலும், அரசாணை எண்.92, உள் (மிகக் கமுக்கம்) துறை, நாள்

05.02.2014–ன்படி, ஒருமித்த தொகையாக ரூ.5.00 இலட்சம் வழங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

**குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப் பதக்கம்**

ஆண்டுதோறும் குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினத்தன்று சிறைத் துறையினரின் அப்பழுக்கற்ற பணியினைப் பாராட்டி இப்பதக்கம் வழங்கப்படுகிறது. 2015 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று 4 சிறைத்துறை பணியாளர்களும், 2016 ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று 4 சிறைத்துறை பணியாளர்களும் இப்பதக்கத்தைப் பெற்றுள்ளனர்.

## xii) கருணைத் தொகை வழங்குதல்

பணியின்போது வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிடும் பணியாளர்களின் சேவையை அங்கீகரிக்கும் விதமாக அவர்களின் வாரிசுதாரர்களுக்கு, பணியாளர்கள் கடைசியாக பெற்ற சம்பளம், அப்பணியாளர் உயிரோடு இருந்தால் பணிமூப்பில் ஓய்வுபெறும் நாள் எதுவோ அதுவரை, குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. மேலும், இறந்த பணியாளர்களின் குடும்பத்தினருக்கு கருணைத் தொகையாக ரூ.2 இலட்சம் வழங்கப்படுகிறது. மரணம் போன்ற நேர்வு தவிர கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கும் அவைகளுக்கு

எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகை, கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது :–

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தர ஊனம் | ரூ. 50,000/– |
| 2. | படுகாயம் | ரூ. 10,000/– |
| 3. | சாதாரண காயம் | ரூ. 5,000/– |

**xiii) ரொக்கப் பரிசு**

சிறைத்துறையில் பணியாற்றும் களப் பணியாளர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்க சிறைத்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி அதிகார உச்ச வரம்பு அரசாணை (நிலை) எண்.932, உள் (சிறை–1) துறை, நாள் 16.12.2014–ல் கீழ்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது :–

| பதவி | தனிநபருக்கு வழங்கப்படும் ரொக்கப் பரிசிற்கான உச்ச வரம்பு | குழுவினருக்கு வழங்கப்படும் ரொக்கப் பரிசிற்கான உச்சவரம்பு |
|---|---|---|
| கூடுதல் காவல்துறை இயக்குநர்/ சிறைத்துறைத் தலைவர் | ரூ.250/– லிருந்து ரூ.1,000/– | ரூ.500/– லிருந்து ரூ.10,000/– |
| சிறைத்துறைத் துணைத் தலைவர் | ரூ.150/– லிருந்து ரூ.500/– | ரூ.300/– லிருந்து ரூ.5,000/– |
| சிறைக் கண்காணிப்பாளர் | ரூ.50/– லிருந்து ரூ.300/– | ரூ.150/– லிருந்து ரூ.1,500/– |

## xiv) பணியாளர்களின் குறை தீர்க்கும் செயலாக்க முறை

சிறைத்துறையின் பல்வேறு நிலைகளிலுள்ள மூத்த அலுவலர்களால் குறை தீர்ப்பு நாள் கூட்டங்கள் திட்டமிட்டபடி நடத்தப்பட்டு சிறைப் பணியாளர்களின் குறைகள் களையப்படுகின்றன. கூடுதல் காவல்துறை இயக்குநர் / சிறைத்துறைத் தலைவரால் காலாண்டிற்கு ஒருமுறையும், சரக சிறைத்துறை துணைத் தலைவர்களால் மாதம் ஒருமுறையும், மத்திய சிறைக் கண்காணிப்பாளர்களால் வாரம் ஒருமுறையும், பணியாளர்களின் குறை தீர்ப்பு நாள் கூட்டங்கள் நடத்தப்பட்டு அக்கூட்டங்களின்போது பணியாளர்களால் தெரிவிக்கப்படும் குறைகளைக் களைவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. திட்டமிட்டபடி நடைபெறும் குறை தீர்ப்பு நாள் கூட்டங்களைத் தவிர, கூடுதல் காவல்துறை இயக்குநர்/சிறைத்துறைத் தலைவர் சிறைகளில் ஆய்வு மேற்கொள்ளும்போதும், சிறைகளைப் பார்வையிடும்போதும் மற்றும் தலைமை இடத்தில் இருந்தும் சிறைத்துறை பணியாளர்களால் அளிக்கப்படும் குறை தீர்ப்பு மனுக்களைப் பெற்றுக் கொள்கிறார்.

**xv) சிறைத்துறை தலைமை அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்**

அரசு ஆணையின்படி, சென்னை எழும்பூர், வேனல்ஸ் சாலையில், ரூ.875.35 இலட்சம் செலவில், சிறைத்துறை தலைமை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இந்த புதியக் கட்டடம் 25.02.2016 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## VIII. புதிய செயல்பாடுகள்

**i) மாவட்டச் சிறைகளுக்கு தலா ஒரு அவசரகால ஊர்தி மற்றும் ஒரு இரு சக்கர வாகனம், புதிய ஊர்திகள் வழங்குதல்**

விருதுநகர், இராமநாதபுரம், ஆத்தூர், கோபிச்செட்டிபாளையம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள மாவட்டச் சிறைகளுக்கு தலா ஒரு அவசரகால ஊர்தி மற்றும் ஒரு இரு சக்கர வாகனம் ரூ.29.95 இலட்சம் செலவில் கொள்முதல் செய்திட, அரசாணை (நிலை) எண்.971, உள் (சிறை—4) துறை, நாள் 28.12.2015—ல் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், 12 கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர்களுக்கு அலுவலகப் பயன்பாட்டிற்காக ரூ.64.27 இலட்சம் செலவில்

12 ஊர்திகள் வாங்கிட அரசாணை (நிலை) எண்.273, உள் (சிறை–4) துறை, நாள் 03.03.2016–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

### ii) சிறைகள் மற்றும் மண்டல நன்னடத்தை அலுவலர் அலுவலகங்களில் அகண்ட அலைவரிசை இணைப்பு வசதி ஏற்படுத்துதல்

மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், கிளைச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளிகள், திறந்தவெளிச் சிறைகள் மற்றும் மண்டல நன்னடத்தை அலுவலர் அலுவலகங்களில், ரூ.16.94 இலட்சம் தொடர் செலவினம் மற்றும் ரூ.3.47 இலட்சம் தொடரா செலவினத்தில், அகண்ட அலைவரிசை இணைப்பு வசதி ஏற்படுத்திட, அரசாணை (நிலை) எண்.944, உள் (சிறை–4) துறை, நாள் 22.12.2015–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

### iii) சிறை மேலாண்மை தகவல் அமைப்பு

சிறை பாதுகாப்பினை மேம்படுத்தும் பொருட்டும், சிறைப் பணியாளர்களை கண்காணிக்கவும், அரசாணை (நிலை) எண்.699, உள் (சிறை–4) துறை, நாள் 17.09.2014–ல் ரூ.150.00 இலட்சம் செலவில், 9 மத்திய சிறைகள், 3 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் இணையதள சிறை மேலாண்மை தகவல் அமைப்பு ஏற்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

### iv) சிறை கட்டடங்களின் ஒருங்கிணைந்த பராமரிப்பு

கடலூர் மற்றும் பாளையங்கோட்டை மத்திய சிறைகளில் ஒருங்கிணைந்த பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.1118, உள் (சிறை–4) துறை, நாள் 09.12.2013–ல், ரூ.500.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், சேலம் மத்திய சிறையில் சிறப்பு ஒருங்கிணைந்த பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள, அரசாணை (நிலை) எண். 149, உள் (சிறை–4) துறை, நாள் 10.02.2016–ல், ரூ.647.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### v) புழல் மத்திய சிறை வளாகத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்தல்

தினந்தோறும் புழல் மத்திய சிறை வளாகத்தில் இருந்து வெளியேறும் 6 இலட்சம் லிட்டர் கழிவுநீரை சுத்திகரித்து மீண்டும் உபயோகிக்க, கழிவுநீர் மறுசுழற்சி நிலையம் ஒன்றை "BOOT" (கட்டுதல், சொந்தமாக்கிக் கொள்ளுதல், இயக்குதல், மாற்றுதல்) என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகம் மூலம் அமைக்கவும், அதனைப் பராமரிக்கவும் ஏதுவாக, அரசாணை (நிலை) எண்.37, உள் (சிறை–4) துறை, நாள்

**13.01.2015—ல்,** ரூ.**250.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**vi) தாமிரபரணி ஆற்றிலிருந்து பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு தூய குடிநீர் வழங்கும் திட்டம்**

தாமிரபரணி ஆற்றிலிருந்து கிடைக்கும் நீரை ஆதாரமாகக் கொண்டு பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு தூய்மையான குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக, அரசாணை (நிலை) எண்.**1005**, உள் (சிறை—**4**) துறை, நாள் **29.12.2014—ல்,** ரூ.**155.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**vii. தொழிற்கூடங்கள்**

அ) கோயம்புத்தூர் மத்திய சிறையில் உள்ள விசைத்தறிக் கூடத்தினை நவீனமயமாக்க ரூ.**150.00** இலட்சம் செலவில் **3** ஏர் ஜெட் விசைத்தறி இயந்திரங்கள் கொள்முதல் செய்ய அரசு ஆணை பிறப்பித்து இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

ஆ) திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் உள்ள நெசவுக் கூடத்திற்கு ரூ.**7.50** இலட்சம் செலவில் துணைக் கருவிகளுடன் கூடிய **5** விசைத் தறிகள் வழங்கப்பட்டுள்ளன.

இ) 9 மத்திய சிறைகளிலும் ரூ.90.00 இலட்சம் செலவில் கைமுறை காகித உற்பத்திப் பிரிவுகளை அமைக்க அரசு ஆணை பிறப்பித்து மத்திய சிறை, கோயம்புத்தூர் மற்றும் சேலத்தில் பணிகள் நிறைவுற்றும், இதர சிறைகளில் பணிகள் நடைபெற்றும் வருகிறது.

ஈ) ரூ.152.00 இலட்சம் செலவில், மத்திய சிறை–1, புழல், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் பாளையங்கோட்டை ஆகிய மத்திய சிறைகளில் நிலக்கரி சாம்பல் மூலம் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலையினை நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

உ) சேலம் மத்திய சிறையில் ரூ.90.00 இலட்சம் செலவில் எவர்சில்வர் பாத்திர உற்பத்தி நிலையம் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஊ) வேலூர் மத்திய சிறையில் உள்ள காலணி தயாரிப்புக் கூடத்திற்கு ரூ.10.45 இலட்சம் செலவில் நவீன எந்திரங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

எ) வேலூர் மத்திய சிறையில் உள்ள காலணி தயாரிப்புக் கூடத்தை ரூ.18.00 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்திட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### viii) சிறை அங்காடிகளை நிறுவுதல்

சிறைவாசிகளது சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்விற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் அவர்களது மனித சக்தியை ஆக்கப்பூர்வமான வழியில் பயன்படுத்திட, சிறை வளாகங்களின் எல்லைகளுக்குள் ''சிறை அங்காடிகளை'' நிறுவிட அரசாணை (நிலை) எண்.360, உள் (சிறை–3) துறை, நாள் 15.05.2012–ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி அனைத்து மத்திய சிறைகள், சில மாவட்டச் சிறைகள் மற்றும் கிளைச் சிறை வளாகங்களில் சிறை அங்காடிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த அங்காடிகளின் வளர்ச்சிக்காக ரூ.10.00 இலட்சம் கொண்ட ஒரு தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அங்காடிகளில் சிறைவாசிகளால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களான அடுமனைப் பொருட்கள், தோல் காலணிகள், பணப்பை, தோட்டக்கலை தயாரிப்புக்கள், சலவை சோப்பு, சானிட்டரி நாப்கின், எல்.இ.டி. மின்சார விளக்குகள், மெழுகுவர்த்தி, கொசுவலை, மழைமேலங்கி (raincoat), ஷூ பாலீஷ், ஆயத்த ஆடைகள், தேன், மசாலாத் தூள், கைவினைப் பொருட்கள், காகித உறைகள், நோட்டுப் புத்தகங்கள், இயற்கை உரமிட்ட காய்கறிகள், மண்புழு உரம், பஞ்ச கவ்யம், ஓவியங்கள் போன்ற பொருட்கள் 'ஃப்ரீடம்' என்ற பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இச்சிறை

அங்காடிகளில் உணவகம் போன்ற இதர சில்லரை வணிக நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

இந்த அங்காடிகளில் 30.06.2016 வரை ரூ.11.24 கோடி மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### ix) முழுமையான தையற்கூடம் துவக்குதல்

பெண் சிறைவாசிகளுக்கு தையற்கலையை கற்பிப்பது எளிதானது மட்டுமின்றி அவர்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின் குறைந்த முதலீட்டில் அவர்களது வாழ்வாதாரத்திற்கு தேவையான பொருளை ஈட்டவும் முடியும். மேலும், தையற்கலை பெண் சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான சிறந்த காரணியாகும் என்பதால், திருச்சிராப்பள்ளி பெண்கள் தனிச் சிறையில் ரூ.5.00 இலட்சம் செலவில் நவீன இயந்திரங்களுடன் கூடிய தையற்கூடம் ஒன்றை நிறுவிட அரசாணை (நிலை) எண். 763, உள் (சிறை–3) துறை, நாள் 10.10.2014–ல் ஆணையிடப்பட்டு தையற்கூடம் செயல்பட்டு வருகிறது.

### x) சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்தல்

புழல் மத்திய சிறை வளாகத்தில் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்யும் சாதனத்தை ரூ.2.41 கோடி செலவில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டுக் குழுமம் மூலம் நிறுவி

செயல்படுத்திட அரசாணை (நிலை) எண். 489, உள் (சிறை–4) துறை, நாள் 11.07.2013–ல் ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### xi) கிளைச் சிறை, சைதாப்பேட்டை மற்றும் தனி கிளைச் சிறை, பூந்தமல்லியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

கிளைச் சிறை, சைதாப்பேட்டை மற்றும் தனி கிளைச் சிறை, பூந்தமல்லியில் தற்போதைய எண்ணிக்கையை விட கூடுதலாக தலா 100 சிறைவாசிகளை அனுமதிக்கும் வகையில் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசாணை (நிலை) எண்.161, உள் (சிறை–4) துறை, நாள் 25.02.2014–ல் ரூ.90.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடப் பணிகள் முடிவுற்றன.

### xii) புதிய சிறைகள் கட்டுதல்

அ) மத்திய சிறைகளில் இட நெருக்கடியைக் குறைக்க புதிய மாவட்டச் சிறைகள் நிறுவவும், சில கிளைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக தரம் உயர்த்தவும் இந்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. தேனி மாவட்டத்தில், பார்ஸ்டல் பள்ளி இணைப்பினை உள்ளடக்கிய மாவட்டச் சிறையினை ரூ.702.90 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் நிறுவிட அரசாணை நிலை எண். 180, உள் (சிறை–4) துறை, நாள் 20.02.2015–ல் நிர்வாக

ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஆ) திருப்பூர் மாவட்டத்தில், பெண்கள் இணைப்புச் சிறையினை உள்ளடக்கிய மாவட்டச் சிறையினை ரூ.995.76 இலட்சம் செலவில் நிறுவிட, அரசாணை (நிலை) எண்.1024, உள் (சிறை–4) துறை, நாள் 27.11.2013–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு பணிகள் நிறைவு பெற்று விட்டன.

இ) விழுப்புரம் மற்றும் தருமபுரி மாவட்டத்தில், பார்ஸ்டல் பள்ளி இணைப்பினை உள்ளடக்கிய மாவட்டச் சிறையினை நிறுவிட, முறையே அரசாணை (நிலை) எண்.1117, உள் (சிறை–4) துறை, நாள் 09.12.2013–ல், ரூ.906.00 இலட்சம் மற்றும் அரசாணை (நிலை) எண்.1127, உள் (சிறை–4) துறை, நாள் 10.12.2013–ல், ரூ.588.37 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்திடம் பணிகள் ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

ஈ) மதுரை மற்றும் கோயம்புத்தூரில் பெண்கள் தனிச் சிறைகள் புதிதாக உருவாக்க, முறையே அரசாணை (நிலை) எண்.800, உள் (சிறை–4) துறை, நாள் 07.10.2013–ல், ரூ.199.35 இலட்சம் மற்றும் அரசாணை (நிலை) எண்.1023, உள் (சிறை–4) துறை, நாள் 27.11.2013–ல், ரூ.175.75 இலட்சம் ஒப்பளிப்பு

வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நிறைவுற்று, **25.02.2016** அன்று முதல் சிறைச்சாலைகள் செயல்பட்டு வருகின்றன.

உ) செங்கல்பட்டு தனிக் கிளைச் சிறையினை ரூ.**2.22** கோடி திட்ட மதிப்பீட்டில் மாவட்டச் சிறையாக தரம் உயர்த்திட, அரசாணை நிலை எண்.**1040**, உள் (சிறை**–4**) துறை, நாள் **28.11.2013–**ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடப் பணிகள் முடிவுற்றன.

ஊ) தூத்துக்குடி மாவட்டத்தில், பேரூரணி கிராமத்தில், ரூ.**12.95** கோடி செலவில், பார்ஸ்டல் பள்ளி இணைப்பு மற்றும் பெண்கள் இணைப்புச் சிறையை உள்ளடக்கிய மாவட்டச் சிறை அமைக்க, அரசாணை (நிலை) எண்.**1041**, உள் (சிறை**–4**) துறை, நாள் **28.11.2013–**ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு, கட்டடப் பணிகள் முடிவுற்றன.

## IX. முடிவுரை

சிறைவாசிகளின் சீர்திருத்தப் பணிகளில் புதிய நலத் திட்டங்களை மேற்கொள்வதற்கும், சிறைத்துறை பணியாளர்களின் பணிச் சூழலை மேம்படுத்துவதற்கும், அரசின் சீரிய ஆதரவை சிறைத்துறை தொடர்ந்து பெற்று வருகிறது. சிறை உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல், சிறைவாசிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல், அவர்கள் உடல் நலம் மற்றும்


மனநலம் பெறுவதற்கு வழிவகை செய்தல், பெண் சிறைவாசிகள் மற்றும் அவர்களின் குழந்தைகள் நலன் மீது அக்கறை கொள்ளுதல், சிறைவாசிகளது மனித உரிமை பேணுதல் ஆகியவற்றை மேலும் மேம்படுத்தும் வகையில் சிறைத்துறை தொடர்ச்சியான முயற்சிகளுடன் முழுமையான கவனமும் செலுத்தி வருகிறது.

தேசிய மற்றும் உலகத் தரத்தில் சிறந்த நிலையை எய்திட சிறைத் துறை தொடர்ந்து பாடுபடும்.

**சி.வி. சண்முகம்**
**சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்**
**சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.**

<u>**பிற்சேர்க்கை– I**</u>

## சிறைத்துறையின் நிர்வாக அமைப்பு




குறிப்பு: மத்தியச் சிறைக் கண்காணிப்பாளர்களின் ( புழல் மத்திய சிறை –2 தவிர) அதிகார வரம்பிற்குட்பட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், திறந்தவெளிச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளி மற்றும் கிளைச் சிறைகள் அவர்களது கட்டுப்பாட்டில் செயல்படும்.

**பிற்சேர்க்கை-II**

**சிறைச்சாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட இடவசதி பற்றிய விவரம்**

| சிறைகள் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| **சென்னை மாவட்டம்** | |
| கிளைச் சிறை, சைதாப்பேட்டை | 175 |
| **காஞ்சிபுரம் மாவட்டம்** | |
| கிளைச் சிறை, காஞ்சிபுரம் | 34 |
| கிளைச் சிறை, மதுராந்தகம் | 62 |
| தனிக் கிளைச் சிறை, செங்கல்பட்டு | 200 |
| **திருவள்ளூர் மாவட்டம்** | |
| மத்திய சிறை–1, புழல் | 1250 |
| மத்திய சிறை–2, புழல் | 1250 |
| பெண்கள் தனிச் சிறை, புழல் | 500 |
| பார்ஸ்டல் பள்ளி, புழல் | 100 |
| கிளைச் சிறை, திருவள்ளூர் | 36 |
| கிளைச் சிறை, பொன்னேரி | 42 |
| கிளைச் சிறை, திருத்தணி | 36 |
| தனிக் கிளைச் சிறை, பூந்தமல்லி | 152 |
| **வேலூர் மாவட்டம்** | |
| மத்திய சிறை, வேலூர் | 2130 |
| பெண்கள் தனிச் சிறை, வேலூர் | 469 |
| பார்ஸ்டல் பள்ளி, வேலூர்(இணைப்பு) | 54 |
| கிளைச் சிறை, ஆம்பூர் | 20 |
| கிளைச் சிறை, அரக்கோணம் | 36 |
| கிளைச் சிறை, திருப்பத்தூர் | 74 |

| | |
|---|---|
| கிளைச் சிறை, வாணியம்பாடி | 30 |
| கிளைச் சிறை, வாலாஜா | 19 |
| கிளைச் சிறை, குடியாத்தம் | 54 |
| **திருவண்ணாமலை மாவட்டம்** | |
| கிளைச் சிறை, செய்யாறு | 48 |
| கிளைச் சிறை, திருவண்ணாமலை | 49 |
| கிளைச் சிறை, ஆரணி | 17 |
| கிளைச் சிறை, செங்கம் | 9 |
| கிளைச் சிறை, போளூர் | 36 |
| கிளைச் சிறை, வந்தவாசி | 19 |
| **கடலூர் மாவட்டம்** | |
| மத்திய சிறை, கடலூர் | 723 |
| கிளைச் சிறை, கடலூர் (பெண்கள்) | 100 |
| கிளைச் சிறை, கடலூர் | 143 |
| கிளைச் சிறை, விருதாச்சலம் | 30 |
| கிளைச் சிறை, பரங்கிப்பேட்டை | 24 |
| பார்ஸ்டல் பள்ளி, பண்ருட்டி | 15 |
| கிளைச் சிறை, சிதம்பரம் | 28 |
| **விழுப்புரம் மாவட்டம்** | |
| கிளைச் சிறை, விழுப்புரம் | 42 |
| கிளைச் சிறை, கள்ளக்குறிச்சி | 18 |
| கிளைச் சிறை, திண்டிவனம் | 29 |
| கிளைச் சிறை, உளுந்தூர்பேட்டை | 24 |
| கிளைச் சிறை, திருக்கோவிலூர் | 24 |
| பார்ஸ்டல் பள்ளி, செஞ்சி | 80 |
| **சேலம் மாவட்டம்** | |
| மத்திய சிறை, சேலம் | 1431 |
| மாவட்டச் சிறை, ஆத்தூர் | 200 |

| | |
|---|---|
| பண்ணைச் சிறை, சேலம் | 10 |
| தனிக்கிளைச் சிறை, சேலம் (பெண்கள்) | 110 |
| பார்ஸ்டல் பள்ளி, சங்ககிரி | 27 |
| கிளைச் சிறை, ஓமலூர் | 48 |
| **நாமக்கல் மாவட்டம்** | |
| கிளைச் சிறை, நாமக்கல் | 34 |
| பார்ஸ்டல் பள்ளி, பரமத்தி | 16 |
| கிளைச் சிறை, இராசிபுரம் | 24 |
| கிளைச் சிறை, திருச்செங்கோடு | 19 |
| **தருமபுரி மாவட்டம்** | |
| கிளைச் சிறை, தருமபுரி | 36 |
| கிளைச் சிறை, அரூர் | 48 |
| **கிருஷ்ணகிரி மாவட்டம்** | |
| கிளைச் சிறை, கிருஷ்ணகிரி (பெண்கள்) | 73 |
| கிளைச் சிறை, ஊத்தங்கரை | 16 |
| கிளைச் சிறை, ஓசூர் | 44 |
| **கோயம்புத்தூர் மாவட்டம்** | |
| மத்திய சிறை, கோயம்புத்தூர் | 2124 |
| பெண்கள் தனிச் சிறை, கோயம்புத்தூர் | 262 |
| திறந்த வெளிச் சிறை, சிங்காநல்லூர் | 100 |
| கிளைச் சிறை, மேட்டுப்பாளையம் (பெண்கள்) | 36 |
| பார்ஸ்டல் பள்ளி, பொள்ளாச்சி | 97 |
| **ஈரோடு மாவட்டம்** | |
| கிளைச் சிறை, ஈரோடு | 35 |
| கிளைச் சிறை, சத்தியமங்கலம் | 16 |
| கிளைச் சிறை, பவானி | 24 |
| கிளைச் சிறை, பெருந்துறை | 8 |
| மாவட்டச் சிறை, கோபிசெட்டிபாளையம் | 200 |

| | |
|---|---|
| **நீலகிரி மாவட்டம்** | |
| கிளைச் சிறை, ஊட்டி | 35 |
| கிளைச் சிறை, குன்னூர் | 32 |
| கிளைச் சிறை, கூடலூார் | 28 |
| **திருப்பூர் மாவட்டம்** | |
| கிளைச் சிறை, அவினாசி | 70 |
| கிளைச் சிறை, திருப்பூர் | 90 |
| கிளைச் சிறை, உடுமலைபேட்டை | 25 |
| கிளைச் சிறை, தாராபுரம் | 26 |
| கிளைச் சிறை, பல்லடம் | 24 |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்** | |
| மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி | 2517 |
| பெண்கள் தனிச் சிறை, திருச்சிராப்பள்ளி | 600 |
| கிளைச் சிறை, மணப்பாறை | 14 |
| கிளைச் சிறை, முசிறி | 17 |
| கிளைச் சிறை, துறையூர் | 17 |
| கிளைச் சிறை, லால்குடி | 23 |
| **அரியலூர் மாவட்டம்** | |
| பார்ஸ்டல் பள்ளி, அரியலூர் | 21 |
| கிளைச் சிறை, ஜெயங்கொண்டம் | 19 |
| **பெரம்பலூர் மாவட்டம்** | |
| கிளைச் சிறை, பெரம்பலூர் | 18 |
| **கரூர் மாவட்டம்** | |
| கிளைச் சிறை, கரூர் | 36 |
| கிளைச் சிறை, குளித்தலை | 26 |

| | |
|---|---|
| **புதுக்கோட்டை மாவட்டம்** | |
| மாவட்டச் சிறை, புதுக்கோட்டை | 405 |
| பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை | 40 |
| கிளைச் சிறை, அறந்தாங்கி | 28 |
| கிளைச் சிறை, திருமயம் | 14 |
| கிளைச் சிறை, கீரனூர் | 8 |
| **தஞ்சாவூர் மாவட்டம்** | |
| கிளைச் சிறை, திருவிடைமருதூர் | 51 |
| பார்ஸ்டல் பள்ளி, தஞ்சாவூர் | 87 |
| கிளைச் சிறை, பாபநாசம் | 46 |
| கிளைச் சிறை, பட்டுக்கோட்டை | 38 |
| கிளைச் சிறை, கும்பகோணம் | 44 |
| **நாகப்பட்டினம் மாவட்டம்** | |
| மாவட்டச் சிறை, நாகப்பட்டினம் | 200 |
| கிளைச் சிறை, சீர்காழி | 28 |
| கிளைச் சிறை, மயிலாடுதுறை | 24 |
| கிளைச் சிறை, தரங்கம்பாடி | 12 |
| **திருவாரூர் மாவட்டம்** | |
| கிளைச் சிறை, திருவாரூர் (பெண்கள்) | 20 |
| கிளைச் சிறை, திருத்துறைபூண்டி | 28 |
| கிளைச் சிறை, நன்னிலம் | 24 |
| கிளைச் சிறை, மன்னார்குடி | 19 |
| **மதுரை மாவட்டம்** | |
| மத்திய சிறை, மதுரை | 1252 |
| பெண்கள் தனிச் சிறை, மதுரை | 187 |
| பார்ஸ்டல் பள்ளி, மேலூர் | 48 |
| கிளைச் சிறை, உசிலம்பட்டி | 18 |
| கிளைச் சிறை, திருமங்கலம் | 25 |

| | |
|---|---|
| **திண்டுக்கல் மாவட்டம்** | |
| மாவட்டச் சிறை, திண்டுக்கல் | 200 |
| கிளைச் சிறை, வேடச்சந்தூர் | 16 |
| கிளைச் சிறை, பழனி | 43 |
| கிளைச் சிறை, கொடைக்கானல் | 9 |
| கிளைச் சிறை, நிலக்கோட்டை (பெண்கள்) | 36 |
| **தேனி மாவட்டம்** | |
| கிளைச் சிறை, உத்தமபாளையம் | 21 |
| கிளைச் சிறை, பெரியகுளம் | 39 |
| **சிவகங்கை மாவட்டம்** | |
| கிளைச் சிறை, சிவகங்கை | 20 |
| கிளைச் சிறை, திருப்பத்தூர் | 22 |
| திறந்த வெளிச் சிறை, புரசடையுடைப்பு | 150 |
| **இராமநாதபுரம் மாவட்டம்** | |
| மாவட்டச் சிறை, இராமநாதபுரம் | 200 |
| கிளைச் சிறை, பரமக்குடி (பெண்கள்) | 18 |
| கிளைச் சிறை, முதுகுளத்தூர் | 21 |
| கிளைச் சிறை, திருவாடானை | 12 |
| **விருதுநகர் மாவட்டம்** | |
| மாவட்டச் சிறை, விருதுநகர் | 200 |
| கிளைச் சிறை, அருப்புக்கோட்டை | 13 |
| கிளைச் சிறை, ஸ்ரீவில்லிபுத்தூர் | 24 |
| கிளைச் சிறை, சாத்தூர்(பெண்கள்) | 29 |
| **திருநெல்வேலி மாவட்டம்** | |
| மத்திய சிறை, பாளையங்கோட்டை | 1332 |
| தனிக் கிளைச் சிறை, கொக்கிரகுளம் (பெண்கள்) | 84 |

| | |
|---|---|
| கிளைச் சிறை, தென்காசி | 44 |
| கிளைச் சிறை, சங்கரன்கோவில் | 12 |
| கிளைச் சிறை, அம்பாசமுத்திரம் | 16 |
| பார்ஸ்டல் பள்ளி, நாங்குநேரி | 107 |
| **தூத்துக்குடி மாவட்டம்** | |
| கிளைச் சிறை, தூத்துக்குடி | 40 |
| மாவட்டச் சிறை, ஶ்ரீவைகுண்டம் | 72 |
| கிளைச் சிறை, கோவில்பட்டி | 42 |
| கிளைச் சிறை, திருச்செந்தூர் | 37 |
| **கன்னியாகுமரி மாவட்டம்** | |
| மாவட்டச் சிறை, நாகர்கோவில் | 230 |
| கிளைச் சிறை, தக்கலை (பெண்கள்) | 24 |
| கிளைச் சிறை, குழித்துறை | 16 |
| **மொத்தம்** | **22,632** |